
## திராவிடத்தால் வாழ்கிறோம்

851

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

6

# சமச்சீர் கல்வி -தகர்க்க முடியாத அடித்தளம்!



ஓவியம் : ரவி பேலட்

### கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!

தேசிய கல்விக் கொள்கை என்கிற பெயரில், தமிழ்நாட்டுக் கல்விமுறையைக் காவு வாங்க ஒன்றிய அரசு துடித்துக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில், அனைவருக்குமான பொதுக் கல்வி முறைக்கு, கழகம் நடத்திய போராட்டத்தை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது. சமச்சீரான கல்வியை உருவாக்குவதற்கும், அதைச் செயல்படுத்துவதற்கும் கலைஞர் நடத்திய அந்தப் போராட்டம்தான், இன்று நமது கல்விச் சூழலை உலக அரங்கிற்கு உயர்த்தியிருக்கிறது. கழகம் ஆட்சியில் இருக்கும்போது சமச்சீர் கல்வியைக் கொண்டு வந்ததுடன், கழகம் ஆட்சியில் இல்லாதபோதும், அதற்கு வந்த தடைகளை, சட்டத்தின் துணைகொண்டு முறியடித்தவர் கலைஞர். அந்தப் போராட்டத்தினைப் பார்க்கலாம்.

2009 - 2010-ஆம் கல்வி ஆண்டு வரையில், தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வி முறையில், 'மாநில கல்வித் திட்டம்', 'மெட்ரிக் கல்விமுறை', 'ஆங்கிலோ இந்தியக் கல்விமுறை' மற்றும் 'கீழ்த்திசை கல்விமுறை (ஓரியண்டல்)' என நான்கு வகை கல்வித் திட்டங்கள் பின்பற்றப்பட்டன. பள்ளிகள், தங்களின் விருப்பம்போல பாடத்திட்டங்களைப் பயன்படுத்தி வந்தன. இந்தக் கல்வித் திட்டங்கள் மாணவர்களுக்குச் சுமையாக இருப்பதுடன், மாறிவரும் கல்விச் சூழலுக்கு ஏற்ப இல்லை என, தமிழ்நாடு கல்வியாளர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

'காலத்துக்கு ஈடுகொடுக்கும் கல்விக் கொள்கையை வகுக்க வேண்டும்' என கல்வியாளர்கள் அவ்வை நடராசன், மு. அனந்தகிருஷ்ணன், க.ப.அறவாணன், பொற்கோ உள்ளிட்ட ஏராளமான கல்வியாளர்கள் பல கருத்தரங்குகளில் வலியுறுத்தி வந்தனர். அ.தி.மு.க. தவிர்த்த அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்து வந்தன. சமூக மாற்றங்களுக்கான கோரிக்கைகளுக்கு கழகம் எப்போதும் செவி சாய்த்தே வந்துள்ளது. 2005-ஆம் ஆண்டு காலகட்டத்தில், இந்த கோரிக்கைகள் வலுப்பெற்று வந்தபோது, 2006-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் 'அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி வழங்கிடும் சமச்சீர் கல்விமுறையை தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் வழங்கிட வழி அமைப்போம்' என்று வாக்குறுதி அளித்தது கழகம்.

#### சொன்னதைச் செய்த கலைஞர்

2006-ஆம் ஆண்டு நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும், அதற்கான வேலைகளைத் தொடங்கினார் கலைஞர்.

ஆட்சிக்கு வந்ததும், முதல் வேலையாக, சமச்சீர் கல்வி குறித்து ஆய்வு செய்வதற்காக பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் முனைவர் எஸ்.முத்துக்குமரன் தலைமையில் ஒரு குழு அமைத்து உத்தரவிட்டார்.

அந்தக் குழு தனது ஆய்வறிக்கையை, அரசுக்கு அளித்ததும், குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்க எம்.பி.விஜயகுமார் (ஓய்வு) ஒருநபர் குழு அமைக்க அரசாணை 222/ பள்ளிக் கல்வித்துறை 3.9.2007 அன்று உத்தரவிட்டது. அந்தக் குழுவும் தனது ஆலோசனைகளை அரசுக்கு அளித்தது.

சமச்சீர் கல்வி முறைக்குள் பாடமுறை, பாடப்புத்தகங்கள், தேர்வுமுறை மற்றும் மதிப்பெண்கள் வழங்கும் முறை ஒவ்வொன்றும் தனித்தனியாக நடைமுறைப்படுத்த பரிந்துரைகளை அளித்திருந்தது கல்வியாளர் குழு. அவற்றில் இருந்த சிறப்பான கூறுகளை உள்ளடக்கி, மாநிலம் முழுவதும் ஒரே சீரான சமச்சீர் கல்வி முறையினைக் கொண்டு வருவதற்கு விரும்பினார், நம் இனக் காவலர் முத்தமிழறிஞர் கலைஞர்.

குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் சமச்சீர் கல்விமுறையை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராய, பிற மாநிலங்களில் நடைமுறையில் இருக்கும் பாடத் திட்டங்கள், தேர்வுமுறைகள் ஆகியவற்றை குறித்து, ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க அதிகாரிகள் மற்றும் கல்வியாளர்கள் கொண்ட குழுவும் அமைக்கப்பட்டது. (அரசாணை எண்: 212 பள்ளிக் கல்வித்துறை, நாள்: 30.10.2008)

இந்தக் குழுவினர் கர்நாடகா, குஜராத், கேரளா, மகாராஷ்டிரா மாநிலங்களுக்கு நேரில் சென்று, ஆய்வு செய்து, விரிவான அறிக்கையினை அரசிடம் அளித்தனர். அதையடுத்து, சமச்சீர் கல்வித் திட்டத்தை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக, 2010-ஆம் ஆண்டு கலைஞர் அவசர சட்டத்தினைக் கொண்டு வந்தார். 2010-ஆம் ஆண்டு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை சட்டமும் (தமிழ்நாடு சட்டம்- 8/2010) அதன் கீழ் விதிகளும் 1.2.2010 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

முதற்கட்டமாக 2010-2011-ஆம் கல்வி யாண்டில், 1-ஆம் வகுப்பு மற்றும் 6-ஆம் வகுப்புகளுக்குப் பாடத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டு, தமிழ்நாடு பாடநூல் கழகத்தால் பாடப் புத்தகங்கள் தயார் செய்யப்பட்டன. அந்தக் கல்வியாண்டில் முதலாம் வகுப்புக்குத் தேவையான 61 லட்சம் பாடப் புத்தகங்களும், 6-ஆம் வகுப்புக்குத் தேவையான 84 லட்சம் பாடப் புத்தகங்களும் அச்சிடப்பட்டு பள்ளிகளில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.




> எல்லாவற்றிலும் சமமாக இருக்க வேண்டும் -அனைவருக்கும் சம உரிமை தரப்பட வேண்டும் என்றெல்லாம் பேசப்படுகின்ற இந்தக் காலக்கட்டத்தில் கல்வியிலும் சமத்துவம் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதுதான், தி.மு.கழகத்தின், தமிழ்நாட்டிலே உள்ள பெரும்பாலான கல்வியாளர்களின் நிலை.

எல்லாவற்றிலும் சமமாக இருக்க வேண்டும் -அனைவருக்கும் சம உரிமை தரப்பட வேண்டும் என்றெல்லாம் பேசப்படுகின்ற இந்தக் காலக்கட்டத்தில் கல்வியிலும் சமத்துவம் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதுதான், தி.மு.கழகத்தின், தமிழ்நாட்டிலே உள்ள பெரும்பாலான கல்வியாளர்களின் நிலை. அதனை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்பதற்காக எடுத்த எடுப்பிலேயே அறிவித்துவிடாமல், அதற்காக வல்லுநர்கள் குழு, கல்வியாளர்கள் குழு, அதிகாரிகள் குழு என்றெல்லாம் நியமித்து அந்த குழுக்கள் அளித்த அறிக்கைகள், பரிந்துரைகள் அடிப்படையில் சட்டமன்றம் வழியாகவும் அவற்றையெல்லாம் வெளிப்படையாக நிகழ்த்தினார் கலைஞர்.

தவிர, பிற மாநில கல்வித் திட்டங்களை ஆய்வு செய்வதற்காக சுற்றுப்பயணம் செய்யச் செய்து அதன்பிறகுதான் படிப்படியாக சமச்சீர் கல்விமுறையை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். 2010-ஆம் ஆண்டில் கல்வியில் நிகழ்ந்த மாபெரும் மாற்றத்தை அனைத்துத் தரப்பு மக்களும் வரவேற்றனர். ஆனால், கழகத்தையும், கலைஞரையும் புகழ்ந்தால் யாருக்குப் பிடிக்காதோ அவர்கள் சமச்சீர் கல்வியை நிறுத்த வேண்டும் என்பதற்காக, குறுக்கு வழிகளை யோசித்துக் கொண்டிருந்தனர்.

...தொடரும்

## திராவிடம் நவீன தமிழுக்கு வைத்த சிலைகள்!

நவீன தமிழ் எழுத்தாளர்களுக்கு தமிழ்நாட்டில் சிலைகள் இல்லை என வலதுசாரி எழுத்தாளர் ஜெயமோகன் சில நாட்களுக்கு முன் 'ஆனந்த விகடன்' இதழில் ஒரு கருத்தைப் பகிர்ந்திருந்தார். அதற்கு எதிராக திராவிடம் நவீன தமிழுக்கு செய்த பணிகளை நீண்ட பட்டியலிட்டு பதிலடி கொடுத்துள்ளார் எழுத்தாளரும் கழக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகருமான மனுஷ்யபுத்திரன். அவரது பதிவிலிருந்து..

"ஒரு எழுத்தாளருக்கு சிலை வைப்பதைவிட, பிரமாண்டமான பணிகளை இன்றைய அரசு செய்துவருகிறது. பள்ளி-கல்லூரி பாடநூல்களில் நவீன எழுத்தாளர்களின் படைப்புகள் பரவலாக இடம்பெற்றுள்ளன. சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரையில் கலைஞர் நூலகம்ஆகியவை தமிழ்நாட்டின் நவீன பண்பாட்டு மையங்களாக மாறியுள்ளன. இதே போன்ற பிரமாண்டமான நூலகங்கள் கோவையில் பெரியார் பெயரிலும் திருச்சியில் காமராஜர் பெயரிலும் கட்டப்பட்டு வருகின்றன.

மாவட்டம்தோறும் புத்தகக் கண்காட்சிகள் மூலம் புத்தக வாசிப்பு தமிழ்நாடு முழுக்க ஒரு பேரியக்கமாக மாற்றியுள்ளது இந்த அரசு. மண்டல வாரியாக நதிகளின் பெயரில் நடத்தப்படும் இலக்கியத் திருவிழாக்களில் பெரும்பாலும் நவீன எழுத்தாளர்களே உரையாற்ற அழைக்கப்படுகின்றனர்.

இந்தியாவில் எந்த மாநில அரசும் செய்திடாத வகையில் உலகப் புத்தகக் கண்காட்சிகள் தொடர்ந்து இந்த அரசு வந்ததிலிருந்து ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. புதிய நூலகக்கொள்கை வகுக்கப்பட்டு ஏராளமான நவீன படைப்பாளிகளின் நூல்கள் சமீபத்தில் வாங்கப்பட்டன' என நீண்ட பட்டியலிட்டு விளக்கியுள்ளார். சில சிலைகளைக் காட்டிலும் இத்தகைய செயல்கள் ஆயிரம் மடங்கு மேலானவை. இதற்கு முந்தைய ஆட்சிக் காலங்களில் கலைஞர் தமிழுக்கும் தமிழ் அடையாளத்திற்கும் செய்தவற்றையும் மிகப்பெரிய பட்டியலிடலாம். திராவிடம் நவீன எழுத்தாளர்களை ஒருபோதும் விலக்கியதில்லை.

ஆனால், தமிழ் சிறுபத்திரிகைச் சூழலில் அதிகாரத்துடன் இயங்கிய உயர்சாதியினர் திராவிட இயக்கத்தால் தங்கள் சமூக அரசியல் அதிகாரம் முறிக்கப்பட்டதை தாங்கிக்கொள்ள முடியாமல் ஒரு கற்பனையான வெறுப்பு அரசியலை வளர்த்துக்கொண்டனர் என அந்த திராவிட வெறுப்பின் மையமான அரசியலையும் விமர்சித்துள்ளார். அவரது பதிவு பலராலும் பகிரப்பட்டு வருவதுடன், விவாதங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### தளபதி தலைமையேற்று நடத்திய மணவிழா!



என்.பலராமன்

15.03.1999 அன்று அன்றைய இளைஞர் அணி செயலாளர், சென்னை மாநகராட்சியின் மேயர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் என்னுடைய மகள் திருமணத்திற்காக கடலூர் மாவட்டத்திற்கு வருகை தந்திருந்தார். பண்ருட்டி பார்வதி மகாலில் மணம் முடித்த செந்தில் குமார்-செந்தாமரை இணையர், தலைவர் தளபதி அவர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம். உடன் அன்றைய ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட செயலாளர் அமைச்சர் அண்ணன் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் அவர்கள் உள்ளார்.

**- என்.பலராமன், பொதுக்குழு உறுப்பினர், பண்ருட்டி, கடலூர் மேற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கழக மகளிர் மன்றம் தொடக்கம்!

1956-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 21-ஆம் தேதி, தி.மு.கழகத்தின் மகளிர் அணி உருவானது. தொடங்கும்போது 'மகளிர் அணி' என அழைக்கப்பட வில்லை. 'மகளிர் மன்றம்' என்றே அழைக்கப்பட்டது. என்.வி.நடராசன், கழகத் துணைப் பொதுச் செயலாளராக இருந்தபோது, அவரது இல்லத்தில் முதல் கூட்டம் நடைபெற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131